ஈடுபடுகிறோம். எங்கெங்கு கட்டட வசதி இருக்கிறதோ அங்கு பட்ட மேல்படிப்புக்கு பல்கலைக்கழகம் அனுமதிக்கிறது. ஆகவே, மாநிலத்திலிருக்கும் பல்வேறு கலைக் கல்லூரிகளையும் பார்த்து, எங்கெங்கு அவசியப்படுகிறதோ அந்த இடத்திற்கு, கிடைக்கிற நிதியை ஒதுக்கித்தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதன் விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரக் குறிப்பு தரலாம்.

New building in Guindy Engineering College campus

* 510 Q.—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon.
THIRU K. T. K. THANGAMANI:
the Minister for Education and Tourism be pleased to state whether any enquiry has been ordered into the collapse of the Parabolic roofing of the building of the Guindy Engineering College under construction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்நிகழ்ச்சிக்கான காரணங்களை ஆராய வல்லுனர் குழு ஒன்று அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know, Sir, whether the negligence in the execution of the work was detected? May I also know the steps that were taken to avoid such negligence?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. ஒ. சிவசங்கரன் அவர்கள், ஹைவேஸைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர் திரு. தில்லைநாயகம் அவர்கள், தலைமைப் பொறியாளர் (ஜெனரல்) திரு. நமசிவாயம் அவர்கள் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் விரிவாக ஆராய்ந்து அரசினருக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, மேலும் பல விளக்கங்களைக் கேட்டிருக்கிறது. அந்த விளக்கங்கள் வந்த பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: இந்த கிண்டி பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் சாய் வட்ட வடிவக்கூரை சரிந்து விழுந்ததனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அறிவிக்க இயலுமா?

1973 நவம்பர் 30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகளை, தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த கிண்டி இன்ஜினியரிங் கல்லூரிக் கட்டடம் கீழே விழுந்து பல மாதங்கள் ஆனபிறகுதான் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. ஆகவே, விவரங்கள் இருக்கக் கூடும். கட்டடம் விழுந்ததனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு, ஆட் சேதம் உண்டா? இந்த ரிப்போர்ட்டின்பேரில் எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆறு-ஏழு கூலியாட்கள் இறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. கண்டிராக்டருடைய முழுப் பொறுப்பானதால், அவர்களுக்கான காம்பன்சேஷன் முறைப்படி கண்டிராக்டர் தரவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது புதுமாதிரியான டிசைனாக இருப்பதால், டிசைன் போட்டவர், வேலையை எக்ஸிக்யூட் செய்தவர், மேற்பார்வை செய்தவர் ஆகிய அத்தனை பேரையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். விரைவில் அது பற்றி திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரதிதாசனால் எழுதப்பட்ட திருக்குறள் உரை

*** 511 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் எழுதப்பட்ட திருக்குறள் உரையை அச்சிட்டு வெளியிட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் புதுவையைச் சார்ந்தவராக இருந்தாலும் பொதுவாக தமிழக மக்களின் எழுச்சிக்கு பல நல்ல பாடல்களை இயற்றியுள்ளார்கள். அவர்கள், குறிப்பாக திருக்குறளுக்கு உரைநடை நூல் எழுதியதைத் தமிழக மக்கள் பெரும்பாலும் ஆவலோடு எதிர்பார்க்கும் காரணத்தால் அதை